11. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கு தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான மொத்த புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% வீதம் என்ற வகையில் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பளர் நாயகதிற்கு வழங்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ மற்றும் சட்டம் ஒழுங்கு பற்றிய அமைச்சின் இனையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சை நடைமுறை**.- இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்

1. பாட இலக்கம் (03) – பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள் (100 புள்ளிகள்)

- பகுதி I - பொது நிர்வாகம் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(அ) இலங்கை அரசியல் யாப்புத் தொடர்பான அடிப்படை அறிவு.

(ஆ) தாபன விதிக்கோவையின் VI, இருந்து, VIII, XII, XIV, XXIV, XXVII, XXVIII வரையிலான அத்தியாயங்கள் உள்ளடங்கும்.

(இ) 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க அரச சுவடிக் காப்புச் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சுவடிக்காப்பு (திருத்தச்) சட்டம்.

(ஈ) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கம் கொண்ட விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் III ஆம் பகுதி.

(உ) 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கம் கொண்ட தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டம்.

(ஊ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கம் கொண்ட புலமைச் சொத்துச் சட்டம்.

பகுதி II - நிதி முறைமைகள் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(எ) நிதிப் பிரமாணம்

நூலகங்களின் மூலம் நிறைவேற்றப்படும் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் அது சார்ந்த ஒழுங்குவிதிகள்.

2. பாட இலக்கம் (04) – நூலக அமைப்பு – நேரம் 03 மணித்தியாலங்கள் - (100 புள்ளிகள்)

(அ) நூலக கட்டிடங்களும் உபகரணங்களும்

(ஆ) அரசாங்க வெளியீடுகளின் பயனும் பயன்படுத்தும் விதமும்

(இ) நூலகத் துறையிலுள்ள வலய மற்றும் சர்வதேச அமைப்புக்கள்

(ஈ) நூலக முகாமைத்துவ மூலோபாயங்கள்

(உ) நிதி முகாமைத்துவம்

(ஊ) கால முகாமைத்துவம்

(எ) மனித வள முகாமைத்துவம்

(ஏ) இலங்கை தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் பணிகள்

(ஐ) நூலக கணினி மயப்படுத்தல் முறைமைகளும் வலையமைப்புக்களும்.

**கவனிக்க வேண்டியது**.- இப் பரீட்சையிற் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் 40% ஆன புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

14. இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

15. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வழுவுள்ளதாகும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு,
கொழும்பு 07,
2018, யூலை 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை 2017 – (I) 2018**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE II OF THE SRI LANKA GOVERNMENT LIBRARIANS'S SERVICE – 2017 (I) 2018

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

உமக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பந்தியின் குறிப்பைப் பார்க்கவும்) ☐

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :..........................................................................

..........................................................................................................................

(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னர் வருமாறு பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :..........................................................................

..........................................................................................................................

(உதாரணம்: GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) : ..........................................................................

..........................................................................................................................

2.0 சேவை நிலையமும் முகவரியும்:..........................................................................

2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ..........................................................................

..........................................................................................................................

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில் /தமிழில்):

..........................................................................................................................

2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்):

..........................................................................................................................

..........................................................................................................................

3.0 3.1 பால் :

பெண் - 1
ஆண் - 0 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 நீங்கள் பரீட்சைக்கு தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும்:

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

5.0 பிறந்த திகதி : ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

6.0 தற்போது வகிக்கும் பதவி :-

6.1 பதவி : ..........................................................................

6.2 நியமனக் கடிதத்தின் இல. : ..........................................................................

7.0 7.1 நீர் முதற் தடவையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கிறீர்களா?: ..................................

7.2 இல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்: ..................................................

7.3 தபாலகம் /உப தபாலகம்: ..........................................................................

7.4 பற்றுச்சீட்டு இலக்கம் : ..........................................................................

7.5 திகதி: ..........................................................................

| |
|---|
| பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்டிவிடவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்) |

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவரென்றும், ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் நான் வெளிப் படுத்துகின்றேன். மேலும் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்படுவதாகவும் இத்தால் உடன்படுகின்றேன்.

..........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ......................................

9.0 திணைக்களத் தலைவரின் சான்றுரை :

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தின் சேவையிலுள்ள நூலகர் சேவை தரம் II ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,

(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்;

(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது எனவும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்;

(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்;

(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்).

நான் சான்றுப்படுத்துகிறேன்.

திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் : ...................................

முகவரி : .....................................

திகதி : ..................................

7-392

---

**இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் III ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை – 2017 - (I) 2018**

2024/35 ஆம் இலக்க 2017. 06. 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறான இலங்கை அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 03 ஆம் பின் இணைப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப இலங்கை அரச நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை - 2018, நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இவ் அறிவித்தலின் படி குறித்த வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக்காக அரச சேவையின் இணைந்த சேவைக்குரிய அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு**.- இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஒத்திசைவாக மாகாண அரச சேவையின் நூலகர் சேவை விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் உரிய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலும் ஏனைய நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் அவ்வந்த நிறுவனங்களினாலும் வெளியிடப்படும்.

ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென விண்ணப்பங்களின் தலைப்பில் உரித்தான சேவைகள் அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும் போது குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்படல் வேண்டும். அதற்கிணங்க “இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10” ஆகும். அவ் இலக்கத்தினை விண்ணப்பத்தின் வலப் பக்க மேல் மூலையில் தாங்களுக்குரிய சேவை என்னும் இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

02. (i) இப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக அவரால் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டொழுகுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார்.

03. இப் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத்தலைவர் ஊடாக பதிவுத் தபாலில் 2018, ஓகத்து மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் “ பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு” எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்ளை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் தமது அடையாளத்தைப் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இந் நோக்கத்திற்காக, கீழேயுள்ள ஆவணங்களுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஏதாவது ஒன்றையேனும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியினது பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம்.

05. ***விண்ணப்பங்கள்*** - விண்ணப்பங்கள் "ஏ4" அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 1.0 தொடக்கம் 5.0 வரை முதல் பக்கத்திலும் இல. 6.0 தொடக்கம் 9.0 வரை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம் ஆனால் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். முழுமைப்படுத்திய விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக மற்றும் சகல தகவல்களையும் உள்ளடக்கி சரியாக நிரப்பப்பட்டுள்ளதா எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்களை விண்ணபத்தில் உள்ளடக்கி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை -2017 (I) 2018 " எனக் குறிப்பிடவும்.

**போலியான தகவல்களுக்கான தண்டனை**.– விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை நிரப்புதல் வேண்டும். பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தத்தன்மையினை இரத்துச்செய்ய முடியும்.

முதல் முறை இப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்து வரும் தடவைகளில் தோற்றும் அலுவலர்கள் சகல பாடங்களுக்கும் தோற்றுவதாயின் ரூபா. 500 உம் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா. 250 உம் பரீட்சைக் கட்டணமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003.02.13 இற்கு வரவு வைத்து நாட்டின் எந்தவொரு தபாலகம் / உப தபாலகங்களுக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை தம்வசம் வைத்திருத்தல் பிரயோசனமாகும். இப் பரீட்சைக் கட்டணத்திற்கு மேலதிகமாக எதுவித அறவிடலும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். எக்காரணம் கொண்டும் இக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இப் பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்காக மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

6. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்னும் முன் அனுமானத்தின் படி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, அதற்கு உரித்தான பற்றுச்சீட்டுடன் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைத்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பி வைப்பார். பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்டு அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விண்ணப்பதாரிகளிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ் அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு 2/3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன் படி விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை குறிப்பிடல் வேண்டும். கொழும்புக்கு வெளியே வதியும் விண்ணப்பதாரராயின் அவ் விபரங்களுடன் தொலை நகல் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்துடன் கூடிய கோரிகைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலை நகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும். மேலும் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் போது விண்ணப்பதாரியின் வசமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதி, பணம் செலுத்தப்பட்டிருப்பின் பற்றுச் சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவம் அனுப்பிய கடிதத்தைப் பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டைகள் வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

07. விண்ணப்பப்படிவத்தில் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

08. பரீட்சைக்காக தோற்றும் முதல் திகதியன்றே பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது ஒப்பத்தினை சான்றுப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை ஒப்படைத்தல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை பெற்றுள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும். பிரயாணச் செலவுகளேதுவும் வழங்கப்படமாட்டாது.

10. இப் பரீட்சை சிங்களம். தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுதுடன் விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு சேர்வதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியில் அல்லது இரு வினாத் தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி இச்சேவையிற் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும். விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தினை அதன் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

11. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான மொத்த புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இணைந்த சேவைகள் பணிப்பளர் நாயகத்திற்கு வழங்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ மற்றும் சட்டம் ஒழுங்கு பற்றிய அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. ***பரீட்சை நடைமுறை***. - இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

1. பாட இலக்கம் (01) – பொது நிர்வாகம் மற்றும் நிதி முறைமைகள் (100 புள்ளிகள்)

- பகுதி I - பொது நிர்வாகம் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(அ) தாபன விதிக்கோவையின் VI, இருந்து, VIII, XII, XIV, XXIV, XXVII, XXVIII வரையிலான அத்தியாயங்கள் உள்ளடங்கும்.

(ஆ) 2009, பெப்புருவரி 20 ஆந் திகதிய இல. 1589/30 ஐக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதிமுறைகள்.

(இ) 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை நூலகச் சங்கம் (கூட்டிணைப்பு) சட்டம் மற்றும் 2004 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க திருத்தச் சட்டம்.

- பகுதி II - நிதி முறைமைகள் - நேரம் 1 ½ மணித்தியாலங்கள் - (50 புள்ளிகள்)

(இ) நிதிப் பிரமாணம் (X அத்தியாயம் தவிர) நூலகங்களின் மூலம் நிறைவேற்றப்படும் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

2. பாட இலக்கம் (02) – நூலக அமைப்பு – நேரம் 03 மணித்தியாலங்கள் - (100 புள்ளிகள்)

(அ) மாகாண நூலகப் பட்டயம்

(ஆ) நூலகக் குழுக்கள்

(இ) நூலகப் பொருட்களின் காப்பீடு

(ஈ) வாசகர் கல்வி மற்றும் மக்கள் தொடர்பாடல்

(உ) நூலக வகைகளும், சேவைகளும்

(ஊ) நூலக முகாமைத்துவத்தில் கவனத்திற் கொள்ளக் கூடிய கோட்பாடுகளும் மூலோபாயங்களும்

(எ) நூலகங்களில் செயற்படுத்தக்கூடிய விஸ்தரிப்புச் சேவைகள்

**கவனிக்க வேண்டியது**.- இப் பரீட்சையிற் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் 40% ஆன புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

14. இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

15. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு,
கொழும்பு 07,
2018, யூலை 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐ (அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நூலகர் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை 2017 – (I) 2018**

EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE III
OF THE SRI LANKA GOVERNMENT LIBRARIANS' SERVICE – 2017 (I) 2018

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:

சிங்களம் - 02
தமிழ் - 03 ☐
ஆங்கிலம் - 04

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

உமக்கு உரித்தான சேவை (இதை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பந்தியின் குறிப்பைப் பார்க்கவும்.) ☐

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :.........................................................................

.........................................................................................................................

(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னர் வருமாறு பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :.........................................................................

.........................................................................................................................

(உதாரணம்: GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) : .........................................................................

.........................................................................................................................

2.0 சேவை நிலையமும் முகவரியும்:.........................................................................

2.1 அலுவலகத்தின் / திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): .........................................................................

.........................................................................................................................

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில் /தமிழில்):

.........................................................................................................................

2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்):

.........................................................................................................................

.........................................................................................................................

3.0 3.1 பால் :

பெண் - 1 ☐
ஆண் - 0

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இல.: | | | | | | | | | | | | |

4.0 நீங்கள் பரீட்சைக்கு தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும்:

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

5.0 பிறந்த திகதி : ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | | |

6.0 தற்போது வகிக்கும் பதவி :-

6.1 பதவி : ..........................................................................................................

6.2 நியமனக் கடிதத்தின் இல. : ..........................................................................

7.0 7.1 நீர் முதற் தடவையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கிறீர்களா?: ..................................

7.2 இல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்: ...............................................

7.3 தபாலகம் /உப தபாலகம்: ..........................................................................................

7.4 பற்றுச்சீட்டு இலக்கம் : ..............................................................................................

7.5 திகதி: ........................................................................................

பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்டிவிடவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்).

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவனென்றும், ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் நான் வெளிப் படுத்துகின்றேன். மேலும் பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு நான் கட்டுப்படுவதாகவும் இத்தால் உடன்படுகின்றேன்.

.........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .......................................

9.0 திணைக்களத் தலைவரின் சான்றுரை :

(i) இப் பரீட்சார்த்தி இத் திணைக்களத்தின் சேவையிலுள்ள நூலகர் சேவை தரம் III ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,

(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,

(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது எனவும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்.

(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்,

(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

நான் சான்றுப்படுத்துகிறேன்.

..........................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் : ...................................

முகவரி : .....................................

திகதி : ..................................

7 - 393

---

**இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கான பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2018**

இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2018 ஆம் வருடத்திற்காக பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக இங்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயது***.- 2018.05.31 ஆந் திகதியன்று வயது 16 இற்குக் குறையாமலும் 25 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) ***கல்வித் தகைமைகள்***.- சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம்/விஞ்ஞானம் உட்பட ஏதேனும் 6 பாடங்களில் சித்தியுடன், ஏதாவது நாலு பாடங்களில் திறமைச் சித்தி அடைந்திருப்பதுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. **பயிற்சி நெறி**.- பயிலுநர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்களுக்குக் கீழ்க்காணப்படும் தொழிலும் அத்தொழிற் பயிற்சிக்கு உகந்த காலவெல்லைக்குள் கற்பதற்குமான வசதிகளும் அளிக்கப்படும். பயிற்சிநெறிகள் சிங்கள மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படுவதுடன் கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சிக்கு பயிலுநர்கள் 25 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்படுவர் :-

1. டீசல் என்ஜின் இயந்திரத் தொழில்நுட்பவியலாளர் - வருடம் 2 1/2
2. ஒட்டும் நுட்பவியலாளர்/ஒட்டுநர் - வருடம் 3 (NVQ 4)
3. மின் தொழில்நுட்பவியலாளர் (சக்தி) - வருடம் 3 1/2 (NVQ 4)
4. இயந்திரத் தொழில்நுட்பவியலாளர் (பொது) - வருடம் 3 1/2 (NVQ 4)

4. **விண்ணப்பம்**.- விண்ணப்பதாரர்களினால் இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்ற வகையில் 287மி.மீ × 210 மி.மீ. (ஏ4) வெள்ளைத் தாளில் தயாரித்து சரியான முழு விபரங்கள் குறிப்பிடப்படல் வேண்டும். அவசியமான முழு சரியான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல்**.- (i) எழுத்து மூலமாகவும் செயல் மூலமாகவும் ஆன பரீட்சிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளதும் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளதுமான விண்ணப்பதாரர்கள் மட்டும் எழுத்துமூலமான பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) ***எழுத்துமூலப் பரீட்சை***.- கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு மற்றும் பொது அறிவையும் அடிப்படை யாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்து மூலமான பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சிநெறிகளின் தன்மைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) எழுத்துமூல மற்றும் தொழில் தகைமை பரிசோதனைகளின் மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் அந்தந்தப் பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. **பரீட்சை மொழி மூலம்**.- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்காக மீள வழங்கப்படாத 500 ரூபா பரீட்சைக் கட்டணமாக அறவிடப் படும். அக்கட்டணம் புகையிரத பொது முகாமையாளரிற்கு மக்கள் வங்கி நகர மத்திய கிளையில் கணக்கு இலக்கம் 176/1001/2/ 9027313 இற்கு வரவு வைப்பதுடன் எந்த ஒரு மக்கள் வங்கிக் கிளையிலும் கட்டணத்தினை செலுத்தலாம். அவ்வாறு செலுத்தப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்பதாரியின் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தங்களிடம் வைத்திருப்பது நன்று) காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறேதும் காரணத்திற்காகவோ பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

8. **பரீட்சை நிலையம்**.- சகல தகைமைகளையும் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து மூலமான பரீட்சை கொழும்பில் உள்ள பரீட்சை நிலையத்தில் மாத்திரம் நடாத்தப்படும்.

9. **ஒப்பந்தம் கைச்சாத்திடல்**.- பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் பயிற்சிநெறிக்கான குறித்த காலவெல்லைக்குள் பயிற்சியைத் திருப்திகரமான முறையில் பயிலுவதாக தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு இணங்குதல் வேண்டும்.

10. தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்களுக்கு தொழில் வழங்கப்படுவதற்கான உத்தரவாதம் திணைக்களத்தினால் வழங்கப்படமாட்டாது.

11. கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்றவகையில் விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரித்து, "உப முகாமையாளர் (பயிற்சி மற்றும் மனித அபிவிருத்தி), இலங்கை - ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தமுல்ல வீதி, இரத்மலானை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இ.ஜே.பு.தொ.ப.நி-2018' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

12. **விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி**.- 2018.08.10 ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். எம். அபேவிக்கிரம,
புகையிரத பொது முகாமையாளர்.

இலங்கை புகையிரதச் சேவை,
கொழும்பு 10,
2018, யூன் 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இரத்மலானை, இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்காக பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2018**

(அலுவலக உபயோகத்திற்காக)

1. முழுப்பெயர்:
(சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

2. முகவரி:
(சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

3. மாவட்டம் :----.

4. பிறந்த திகதி :----.

5. பால் (ஆண்/பெண்) :----.

6. தொலைபேசி இலக்கம் :----.

7. கல்வித் தகைமைகள் :-
க. பொ. த. சாதாரண தரம் :
முதலாம் அமர்வு

சுட்டெண் :

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | ..................................... | .................. |
| 2. | ..................................... | .................. |
| 3. | ..................................... | .................. |
| 4. | ..................................... | .................. |
| 5. | ..................................... | .................. |
| 6. | ..................................... | .................. |
| 7. | ..................................... | .................. |
| 8. | ..................................... | .................. |
| 9. | ..................................... | .................. |
| 10. | ..................................... | .................. |

8. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ----.

9. விண்ணப்பம் கோரப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கேற்ப தனக்கு விருப்பமான தொழில் பயிற்சிகள் இரண்டை முறையாகக் குறிப்பிடவும் :

(1) :----.
(2) :----.

10. பரீட்சைக் கட்டணம் கட்டிய பற்றுச்சீட்டினை கழறாதவாறு விண்ணப்பத்தில் இணைக்கவும்.

11. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தகவல்கள் தவறானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் எனவும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டறியப்படுமிடத்து பயிற்சியிலிருந்து அகற்றப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7-422

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**
**பெறுகை அறிவித்தல்**

PROCUREMENT FOR THE PURCHASE OF 500 Nos. 12V, 215Ah, 20 Hr RATED LEAD ACID BATTERIES FOR LOCOMOTIVE STARTING TO SRILANKA RAILWAYS- PROCUREMENT No.: SRS/F.7567

1. கொழும்பு, இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்) தலைவர் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து , இலங்கைப் புகையிரத சேவைகளுக்காக லோக்கோமோடிவ் இயந்திரங்களை ஆரம்பிப்பதற்காக 500 எண்ணிக்கையான 12V, 215Ah , 20Hr ரேட்டட் லெட் அசிட் பற்றரிகளை கொள்வனவு செய்வதன் பெறுகைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். உற்பத்தியாளர்கள் அவர் தம் விலைமனுக்களை அற்றோணித்தத்துவம் வழங்கப்பட்ட தர அங்கீகாரம் பெற்ற முகவர் ஊடாகவும் அல்லது நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2018.07.31 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. 2018.07.30 ஆம் திகதி இலங்கை நேரம் பி.ப. 3.00 மணிவரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 6,500 ரூபாவை அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான பணத்தை செலுத்திய பின்னர் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இருந்து அல்லது வெளிநாட்டு தூதுவராலயங்களிலிருந்து பெறக்கூடிய படிவங்கள் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணத்துடன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், இலங்கை, கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவோ பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு( உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள் ,
புகையிரத களஞ்சிய சாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
கொழும்பு 10, இலங்கை.

6. விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய சாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம். மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வரும் முறைமைகளூடாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2438078 , 94 (11) 2436818
தொலை நகல் இலக்கம் : 94(11) 2432044
மின்னஞ்சல் : srs. slr @ gmail. com
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இல. SRS/F. 7567

7- 286

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**
**பெறுகை அறிவித்தல்**

PROCUREMENTS OF 5700 PAIRS OF RAIL JOINT SHIMS TO SRI LANKA RAILWAYS - PROCUREMENT No.: SRS/F.7577

1. இலங்கைப் புகையிரத சேவைக்காக 5700 Pairs of Rail Joint Shims இன் பெறுகைக்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர் களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்களம் பெறுகைக்குழுத் (உயர்மட்டத்திலானது) தலைவர் பொறுப்பேற்பார். விலை மனுதாரர்கள் தமது விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது அற்றோணித்தத்துவத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட மற்றும் இலங்கையிலுள்ள பதிவு செய்யப்பட்ட தர அங்கீகாரம் பெற்ற முகவர்கள் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 4,000 ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய பணத்தில் நிகரான தொகையை செலுத்திய பின்னர் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து 2018.07.31 ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெற்று கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. விலைமனுக்கள் 2018.08.01 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

4. Rail Joint Shims இன் உற்பத்தியாளர்கள் / வழங்குநர் ISO 9001:2008 தரச் சான்றிதழ் படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகவோ அல்லது கொள்வனவுக்காரரினால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய சர்வதேச தர முகாமைத்துவ முறைமை தரத்திற்குச் சமமானதாகவோ இருத்தல் வேண்டும்.

5. புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர் அலுவலகத்தில் விலை மனுக்கள் மூடப்படும் நேரத்திற்குப் பின்னர் உடனடியாக அவை திறக்கப்படும்.

6. விலைமனுக்கள் கீழேயுள்ள அதிகாரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு( உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள் ,
புகையிரத களஞ்சிய சாலைகள் அத்தியட்சகர் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

7. புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2438078 , 94 (11) 2436818
தொலை நகல் இலக்கம் : 94(11) 2432044
மின்னஞ்சல் : srs. slr @ gmail. com
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறியீட்டு இல. SRS/F. 7577

7- 438

---

## ஆய விற்பனையும் குத்தகையும்

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2019**

2019, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2019, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 02 ஆந் திகதிய 207ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2018.08.06 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்திசெய்து இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான சான்றுப்பத்திரத்துடன் முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களைப் பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2018.08.02ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்தப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2018.10.02 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

7. ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக் கொண்டாரென பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக அவர் பதுளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாத கட்டணத்திற்கு கூடுதலான தொகையை என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என்.எம்.ஞானவதி,
பிரதேச செயலாளர் (பதில்),
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2018, யூன் 12.

**அட்டவணை**

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணைதொடர்பான விபரம் - 2019**
(2019.01.01 ஆந் திகதி தொடக்கம் 2019.12.31 ஆந் திகதிவரை)

| கள்ளுத் தவறணையின் பெயர் மற்றும் முகவரி | பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்துள்ள பிரதேச செயலாளர் | கள்ளுத் தவறணை திறக்கப்படும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|
| பதுளை இலக்கம் 01 கள்ளுத் தவறணை | பதுளை | பதுளை மாநகர சபை இல. 6 ஆம் பிரிவின் ஹூணுகொடுவ எனும் அரச காணி | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூ. 5,000 | 2018.08.06 ஆந் திகதி மு. ப. 10.30 |

**மீண்டும் விற்பனை செய்யப்படும் திகதியும் நேரமும்:-** சிறந்த கொள்வனவாளர் முன்வரவில்லையெனில் 2018.10.02 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும்.

7-267

---

**இரத்தினபுரி மாவட்டத்தில் கள்ளுத்தவறணை விற்பனை - 2019**

பின்னவலை 2 ஆம் இலக்கக் கள்ளுத்தவறணை

2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2019ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவை கீழுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்-

(i) 1982.08.20 ஆந் திகதியுடைய 207 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏலவிற்பனையின் படியும்,

(ii) மதுவரிச் சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான விற்பனை உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும்.

2. எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியில் அல்லது மாவட்டச் செயலகத்தில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். பின்னவலை இல. 02 கள்ளுத்தவறணைக்காக 1,500 ரூபாவைக் கொண்ட தொகை செலுத்தப்பட வேண்டும்.

3. இலங்கையில் உள்ள எல்லா பிரதேச செயலகங்களிலும் கொழும்பு மதுபான ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் எழுதப்பட்ட விலைமனு உறையை ஒட்டி முத்திரையிட்டு, அதன் இடதுபக்க

மேல் மூலையில் "பின்னவலை இல. 2 கள்ளுத் தவறணைக்கான விலைமனு" என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கள்ளுத் தவறணை மூடுவதற்கான காலம் முடிவடையும் முன் "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், இம்புல்பே" எனும் விலாசத்திற்கு அனுப்பவும் அல்லது இம்புல்பே பிரதேச செயலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் போடவும்.

4. எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலைமனு சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒருவருக்கு ஒரு கள்ளுத்தவறணைக்கு மேலாக விலைமனு கோரப்பட முடியாது. ஒரு கள்ளுத்தவறணைக்காக 5 பேருக்கும் மேலாக விண்ணப்பம் கோர முடியாது.

